தினமணி

## காய்கனிகள் விலை உயர்வு

First Published : 09 Apr 2012 01:31:53 AM IST



சென்னை, ஏப். 8: போதிய வரத்து இல்லாததால் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கனிகளின் விலை ஞாயிற்றுக்கிழமை (ஏப்ரல் 8) திடீரென உயர்ந்தது.

கோடைகாலம் தொடங்கியதை அடுத்து பழங்கள், காய்கனிகளின் தேவை அதிகரித்து வருகிறது. ஆனால், வரத்து குறைவாக உள்ளதால் விலை அதிகரித்திருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஆசியாவிலேயே பெரிய காய்-கனி அங்காடியாகக் கருதப்படும் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தமிழகம் மட்டுமன்றி பிற மாநிலங்களிலிருந்தும் காய்கனிகள் நாள்தோறும் கொண்டு வரப்படுகின்றன. இதில் கர்நாடகம், ஆந்திரத்திலிருந்து அதிக அளவில் காய்கனிகள் வருகின்றன.

சில நாள்களாக அந்த மாநிலங்களிலிருந்து போதிய அளவு வரத்து இல்லாத காரணத்தினால் காய்கனிகள், பழங்களின் விலை ஞாயிற்றுக்கிழமை உயர்ந்தது. இதன்படி காய்கனிகள் கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.10 வரை விலை உயர்ந்துள்ளது. வரும் நாள்களில் மேலும் விலை உயரக்கூடும் எனக் கூறப்படுகிறது.

வரத்து குறைவால் பெரும்பாலான காய்கனிகளில் விலையேற்றம் காணப்பட்டாலும் வெங்காயத்தின் விலையில் மாற்றம் இல்லை.

கோயம்பேடு மார்க்கெட்டில் ஞாயிற்றுக்கிழமை விலை நிலவரம்: (அடைப்புக்குறிக்குள் பழைய விலை)

பச்சை மிளகாய் - ரூ.22 (20)

கேரட் - ரூ.18 (14)

பீன்ஸ் - ரூ.45 (35)

அவரைக்காய் - ரூ.33 (28)

பீட்ரூட் - ரூ.18 (13)

உருளைக்கிழங்கு - ரூ.13 (10)

பெரிய வெங்காயம் - ரூ.10 (10)

சின்ன வெங்காயம் -15 (15)

தக்காளி - ரூ.25 (25)

சில்லறை விற்பனைக் கடைகளில் விலை இன்னும் அதிகமாக உள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

## வெள்ளரி விளைச்சல் பாதிப்பு: விவசாயிகள் கவலை

First Published : 09 Apr 2012 01:13:59 AM IST



வையாபுரிபட்டிணத்தில் வெள்ளரி பயிரிட்டுள்ள தோட்டம்.

பண்ருட்டி, ஏப். 8: வெள்ளரி கொடி தழைத்து வளர்ந்துள்ளபோதும் காய்ப்பு குறைந்துள்ளதால் வெள்ளரி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பண்ருட்டி வட்டத்தில் சிறுவத்தூர், வையாபுரிபட்டிணம், ஏரிப்பாளையம், அங்குசெட்டிப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் சுமார் 50-க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் வெள்ளரி சாகுபடி செய்யப்படுகிறது. வெள்ளரி பிஞ்சுகள் பச்சையாகவும், சமைத்தும் சாப்பிடலாம். வெள்ளரி பழத்தை சர்க்கரை, வெல்லம் கலந்து சாப்பிட்டால் மிக சுவையாக இருக்கும். பிஞ்சாகவும், பழமாகவும் நுகரப்படும் வெள்ளரி, கோடை காலத்துக்கு ஏற்ற மருத்துவ குணம் கொண்ட சிறந்த உணவாகும்.

இருப்பினும் பண்ருட்டி பகுதி விவசாயிகள் விதை எடுப்பதற்காகவே வெள்ளரியை சாகுபடி செய்கின்றனர். இது குறித்து வெள்ளரி விவசாயிகள் கூறியது: வெள்ளரி 3 மாத பயிர். வெள்ளரி

பிஞ்சுகளை அறுவடை செய்வதில்லை. வெள்ளரி பழத்தில் உள்ள விதைதான் எங்கள் முக்கிய இலக்கு. பழத்தில் இருந்து விதைகளை எடுத்து கழுவி காயவைத்து விற்பனை செய்துவிடுவோம். வியாபாரிகள் வீடு தேடி வந்து விதைகளை வாங்கி செல்கின்றனர். தோல் நீக்கப்பட்ட வெள்ளரி விதையை பாக்கு மற்றும் இனிப்பு வகைகளில் சேர்க்கின்றனர். விதை நீக்கப்பட்ட வெள்ளரிப் பழத்தை கூடை ஒன்று ரூ.100 முதல் 120 வரை பழ வியாபாரிகளுக்கு விற்பனை செய்துவிடுவோம்.

வியாபாரிகள் யாரும் வாங்கவில்லை என்றால் நிலத்திலேயே போட்டுவிடுவோம். பழம் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் தோட்ட பராமரிப்பு, மருந்து மற்றும் ஆள் கூலி உள்ளிட்ட செலவுகளை ஈடுகட்டும்.

ஒரு ஏக்கர் பயிரிட்டால் 150 கிலோ விதை கிடைக்கும். விதை விற்பனை மூலம் ஒரு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வரை நிகர லாபம் கிடைக்கும். ஆனால் இப்போது செடி தழைத்து வளர்ந்துள்ளபோதும் காய்ப்பு குறைவாக உள்ளது.

இதனால் எதிர்பார்த்த லாபம் கிடைக்க வாய்ப்பில்லை. மின்சாரம் இல்லாததால் தண்ணீர் பாய்ச்ச முடியாத சூழல் காரணமாக குறைந்த அளவு பரப்பளவில்தான் பயிர் செய்துள்ளோம். மேலும் புயல் தாக்குதலுக்குப் பின்னர் விவசாயத்தில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என வெள்ளரி விவசாயிகள் தெரிவித்தனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**மஞ்சளுக்கு குறைந்தபட்ச விலை ரூ.10 ஆயிரம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 09,2012,02:07 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: "மஞ்சளுக்கு குறைந்த பட்ச விலையாக குவிண்டாலுக்கு பத்தாயிரம் ரூபாய் அறிவித்து, எளிமையாக அரசே கொள்முதல் செய்ய வேண்டும்' என, பார்லிமென்டில் ஈரோடு எம்.பி., கணேசமூர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

அவர் கூறியதாவது:

பார்லிமென்டில் பட்ஜெட் பொது விவாதத்தில் பங்கேற்றேன். அதில், நடப்பு ஆண்டுக்கான பட்ஜெட் அனைத்து தரப்பினராலும் மிகவும் எதிர்பார்க்கப்பட்டது.

தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் மாதம் ஊதியம் பெறுவோர், சிறு வணிகர்கள், விவசாயிகள், ஜவுளித்துறை சார்ந்தோர் என்று அனைத்து சாமான்ய மக்களுக்கும், சொல்லத்தக்க மாற்றம் ஏதும் தராத இந்த பட்ஜெட் ஏமாற்றத்தையே தருவதாக உள்ளது.
இரு சக்கர வாகனங்கள், வீடு பராமரிப்பு பொருட்கள், ஹோட்டல் உணவு கட்டணம் போன்றவற்றுக்கு கலால் மற்றும் சேவை வரிகள் உயர்த்தப்பட்டுள்ளதால், நடுத்தர மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். மின் மோட்டார் மற்றும் பம்பு ஷெட்டுகளுக்கான கலால் வரி உயர்வு, விவசாயிகளையும், உற்பத்தியாளர்களையும் பெரிதும் பாதிக்கும்.
ஜவுளித்துறையை மேம்படுத்த புதிய திட்டங்கள் ஏதும் இல்லை. சிறு ஜவுளி வியாபாரிகள் எதிர்பார்த்த அளவுக்கு இந்த நிதி நிலை அறிக்கையில் எவ்வித அறிவிப்பும் இல்லை.
விவசாய தொழில் நலிவை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது. கடந்தாண்டு மஞ்சள் குவிண்டால் 17 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. இந்தாண்டு வெறும் 3,500 ரூபாய்க்கு விற்பனையாகிறது. எட்டு ரூபாய்க்கு விற்ற தேங்காய், இப்போது நான்கு அல்லது ஐந்து ரூபாய்க்கு விற்கிறது. 9,000 ரூபாய் வரை விற்ற குச்சிக்கிழங்கு விலை 1,500 ரூபாயாக சரிந்துள்ளது.
விவசாயிகளின் தொழில் பாதுகாக்கப்பட வேண்டுமானால், அரசே விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்து, விவசாயிகளிடம் எளிய முறையில் நேரடிக் கொள்முதல் செய்ய வேண்டும். மஞ்சளுக்கு குறைந்தபட்ச விலையாக குவிண்டாலுக்கு பத்தாயிரம், தேங்காய் பருப்பு கிலோ 70 ரூபாய் என்று உற்பத்தி செலவை கணக்கில் கொண்டு அரசு குறைந்தபட்ச கொள்முதல் விலையாக அறிவித்து, அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளேன்.

## மண்ணின் தரம் அறிந்து அலுவலர் பரிந்துரைபடி உரமிட்டால் கூடுதல் மகசூல் பெறலாம்: அதிகாரி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 09,2012,02:10 IST

கருத்தை பதிவு செய்ய
ராசிபுரம்: "மண்ணின் தரம் அறிந்து, அலுவலர்கள் தரும் பரிந்துரையின்படி உரமிட்டு மண்ணின் தரம் கெடாமல் பாதுகாப்பதுடன், கூடுதல் மகசூல் பெற்று பயன்பெற வேண்டும்' என, ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
விவசாயிகள், தங்களது நிலத்தில் தேவைக்கு அதிகமாக உரங்களை இடுவதால், மண்ணின் தரம் மற்றும் வீரியம் குறைவதோடு, மண்ணின் உயிர் சத்து குறைந்து வருகிறது. அவற்றை தடுப்பதற்கும், விவசாயிகளின் உரச்செலவை கட்டுப்படுத்தவும், மண்ணின் தரத்தினை தொடந்து பாதுகாத்திட வேண்டும்.

அதற்கு விவசாயிகள், தங்களின் நிலங்களில் உள்ள பயிரினை அறுவடை செய்து முடித்ததும், அடுத்த பயிர் செய்வதற்கு முன், மண் மாதிரிகளை எடுத்து எவ்வாரான உரமிட வேண்டும் என தெரிந்து கொள்ள வேண்டும். மண் மாதிரியை, பயிர் அறுவடை முடிந்து நிலம் உழுவதற்கு முன் மண் மாதிரி எடுக்க வேண்டும்.

மண் மாதிரியை, வயலின் நிழலான பகுதியிலோ, வரப்பு ஓரங்களிலோ எருக்குழிக்கு அருகிலோ, வயலின் டிரான்ஸ்பார்மர் இருந்தால் அதன் அடியிலோ, வாய்க்கால் ஓரங்களிலோ எடுக்கக் கூடாது. ஒரு வயலின் பல்வேறு இடங்களில் "வி' வடிவத்தில், ஐந்து இடங்களில் வெட்டி மண் எடுத்து, அவைகளை நன்கு பரப்பி நான்கு பகுதிகளாக பிரித்து, எதிரெதிர் பகுதிகளை நீக்கி இறுதியில், 500 கிராம் அளவு மண்ணினை எடுக்க வேண்டும்.

ஒரு பையில் போட்டு, அதனுள் தங்களது பெயர் முகவரி எழுதுவதோடு, முன்பு பயிரிட்டிருந்த பயிரின் பெயர் மற்றும் தற்போது பயிரிடப்போகும் பயிரின் பெயர் ஆகியவற்றை எழுதி, அருகில் உள்ள வேளாண் மண் மாதிரி பரிசோதனை மையத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

இம்மண் மாதிரிகளை, அந்த பகுதியில் உள்ள வேளாண் உதவி அலுவலர், ராசிபுரம் வேளாண் விரிவாக்க மையம் அல்லது நாமக்கல் மண் பரிசோதனை கூடத்தில் கொடுத்து, மண் ஆய்வு செய்து, அதன்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். அதனால், விவசாயிகளின் உர செலவு குறைவதுடன், மண்ணின் தரமும் பாதுகாக்கப்படுகிறது.

மண் பரிசோதனை அலுவலர்கள் தரும் பரிந்துரைப்படி உரமிட்டு மண்ணிலே பயிருக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய களர் உவர் அமிலம் சுண்ணாம்புத் தன்மை போன்ற தீய குணங்களைக் கண்டறிந்து, அவற்றை நீக்கி மகசூலை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## எலுமிச்சைக்கு கிராக்கி ஒரு கிலோ 80 ரூபாய்

ஏப்ரல் 08,2012,12:37



பொள்ளாச்சி : எலுமிச்சை பழங்களின் வரத்து அதிகரித்துள்ள சூழலில் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. பொள்ளாச்சி காந்தி மற்றும் தேர்நிலை மார்க்கெட்டுக்கு திண்டுக்கல்,

ஒட்டன்சத்திரம், பழநி, திருச்சி, கோவில்பட்டி மற்றும் சேத்துமடை பகுதிகளில் இருந்து எலுமிச்சை விற்பனைக்கு வந்தது. கடந்த ஜனவரி மாதம் வரை பொள்ளாச்சிக்கு ஐந்து டன் எலுமிச்சை வரத்து இருந்தது. கோடை வெயில் சீசன் துவங்கியுள்ளதால், எலுமிச்சை வரத்து மேலும் அதிகரித்தது. அதற்கேற்ப விற்பனையும், விலையும் உயர்ந்தது. பொள்ளாச்சிக்கு வரும் எலுமிச்சையை சிறுவியாபாரிகள் உடனடியாக ஏலம் எடுப்பதால் தொடர்ந்து எலுமிச்சைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

காந்திமார்க்கெட் எலுமிச்சை வியாபாரி நந்தகுமார் கூறியதாவது: பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு அன்றாடம் 10 டன் எலுமிச்சை வரத்து உள்ளது. வால்பாறை, ஆனைமலை, கிணத்துக் கடவு, நெகமம், வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் சந்தைகளுக்கும், கேரளா மாநிலத்துக்கு அதிக அளவில் எலுமிச்சையை வாங்கி செல்கிறனர். கடந்த ஜனவரியில் ஒரு கிலோ எலுமிச்சை 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது. படிப்படியாக விலை உயர்ந்து தற்போது ஒரு கிலோ 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

## தித்திக்கும் பிளம்ஸ் விற்பனைக்குத் தயார்

ஏப்ரல் 08,2012,12:35



கொடைக்கானல் : கொடைக்கானலில் பிளம்ஸ் பழ 'சீசன்' துவங்கியுள்ளது. நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கொடைக்கானல் வில்பட்டி, அட்டுவம்பட்டி, பள்ளங்கி, பூம்பாறை பகுதியில் பிளம்ஸ் அதிகளவில் விளைகிறது. இங்குள்ள தட்பவெப்ப நிலையால், பழங்கள் பெரியதாகவும், சுவையாகவும் இருக்கும். இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு அதிகளவில் செல்கின்றன. சில வாரங்களாக, சாரல் மழை பெய்கிறது. இதனால் பழங்கள் நன்கு விளைந்துள்ளன. பெரிய பழம், கிலோ 120 முதல் 150 ரூபாய் வரை விற்கப்படுகிறது. மே மாதத்தில், வரத்து மேலும் அதிகரிக்கும் என, விவசாயிகள் தெரிவித்தனர்.

## நாட்டின் ரசாயன உர உற்பத்தி 3.69 கோடி டன்னாக உயரும்

ஏப்ரல் 08,2012,02:40



புதுடில்லி:நடப்பு 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் ரŒõயன உர உற்பத்தி 3 கோடியே 68 லட்சத்து 75 ஆயிரத்து 300 டன்னாக உயரும். இது, சென்ற நிதியாண்டை விட 8 சதவீதம் (3 கோடியே 41 லட்சத்து 9 ஆயிரத்து 700 டன்) அதிகம் என, மத்திய உரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.இதில், நிறுவனங்கள் வாயிலான உர உற்பத்தி, நடப்பாண்டு கரீப் பருவத்தில், 1 கோடியே 81 லட்சம் டன்னாகவும், ரபி பருவத்தில், 1 கோடியே 87 லட்சம் டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தாண்டைப் போலவே, நடப்பாண்டில், யூரியா உர உற்பத்தி, 2 கோடியே 26 லட்சம் டன்னாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இது தவிர, கலப்பு மற்றும் டை அம்மோனியம் பாஸ்பேட் (டீ.ஏ.பி) உர உற்பத்தி, முறையே 99 லட்சத்து 80 ஆயிரம் டன் மற்றும் 43 லட்சத்து 10 ஆயிரம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.கடந்த நிதி ஆண்டில் இவற்றின் உற்பத்தி முறையே, 78 லட்சத்து 20 ஆயிரம் டன் மற்றும் 37 லட்சத்து 10 ஆயிரம் டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## தேயிலை வரத்து குறைந்தும் விலையில் திருப்தி இல்லை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 08,2012,23:15 IST

கருத்தை பதிவு செய்ய

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏல மையத்தில், வரத்து குறைந்தும் விலையில் பெரிய அளவிலான முன்னேற்றம் தென்படவில்லை.

குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 14க்கான ஏலம் நடந்தது. மொத்தம் 9.63 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது. இதில், இலை ரகம் 6.96 லட்சம் கிலோ,

டஸ்ட் ரகம் 2.66 லட்சம் கிலோ அடங்கும். வழக்கமாக பங்கெடுக்கும் ஆந்திரா, கர்நாடகா, ராஜஸ்தான், குஜராத் உட்பட உள்நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு ஓரளவு இருந்தது; அவர்கள் தரமான தேயிலை தூளை மட்டுமே வாங்கினர். ஏற்றுமதி வர்த்தகத்தில் பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே பங்கெடுத்தனர். விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 88 சதவீதம் விற்று தீர்ந்தது; கிலோவுக்கு 2 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

விலை நிலவரத்தை பொறுத்தவரை சி.டி.சி., ரக தூளுக்கு அதிகபட்சம் ஹோம்டேல் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு 158 ரூபாய், ஆர்தோடக்ஸ் ரகத்தில் அதிகபட்சம் சாம்ராஜ் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு 220 ரூபாய் விலை கிடைத்தது. இலை ரக விற்பனையில், சாதாரண ரக தூளுக்கு 49 - 55 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 100-143 ரூபாய் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில், சாதாரண ரக தூளுக்கு 52 - 60 ரூபாய், சிறந்த ரகத்துக்கு 90-155 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண் 15ற்கான ஏலம் வரும் 12,13 தேதிகளில் நடக்கிறது. மொத்தம் 9.87 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

பசுந்தேயிலை விலையில் திருப்தி:

ஏல நிலவரம் இவ்வாறு இருப்பினும், விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு ஓரளவு நல்ல விலை கிடைத்து வருகிறது. கடந்த வாரம் முதல் தர பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு 22 ரூபாய் விலை கிடைத்து வந்த நிலையில், இந்த வாரம் ஒரு ரூபாய் குறைந்து ரூபாயாக இருந்தது. இரண்டாம் தர பசுந்தேயிலைக்கு 16, 17 ரூபாய், மூன்றாம் தர பசுந்தேயிலைக்கு 12 ரூபாய் விலை கிடைத்தது.

---

தினகரன்

### உப்பு உற்பத்தி பணி துவக்கம்

பதிவு செய்த நேரம்:2012-04-08 17:06:14

அதிராம்பட்டினம்: அதிராம்பட்டினம் ஏரிப்புறக் கரை, கீழத்தோட்டம் ஆகிய கடற்பகுதியை ஒட்டி 3 ஆயிரம் ஏக்கர் உப்பளங்கள் உள்ளன. கடந்த ஜனவரி மாதம் உப்பு உற்பத்திக் கான முதல் கட்ட வேலை துவங்கி உப்பு உற்பத்தி நடந்து வந்தது. கடந்த மார்ச் மாதம் 28, 30 ஆகிய தேதிகளில் கோடை மழை பெய்ததால் உப்பு உற்பத்தி நிறுத்தப்பட்டது. தற்போது கடும் வெயில் அடிப்பதால் உப்பு உற்பத்தி மீண்டும் துவங்கியது.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *50 சதவீத விவசாயிகள்தான் வேளாண் கடன் பெறுகின்றனர்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*அனைத்து விவசாயிகளும் வேளாண் கடன் பெற அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், 50 சதவீத விவசாயிகளே வேளாண் கடன் பெறுகின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது.*

*எட்டாக்கனி*

*சிறு மற்றும் குறு விவசாயிகளை பொறுத்தவரை வேளாண் கடன்கள் எட்டா கனியாகவே இருந்து வருகிறது. மாநில வாரியாக எடுத்துக்கொண்டால், அரசின் வேளாண் கடன் வசதிகள் சீராக அனைத்து பகுதிகளுக்கும் கிடைப்பதில்லை. இவ்வசதியை முழுமையாக பெறாத பகுதிகள் ஏராளமாக உள்ளன.*

*தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு வெளியிட்டுள்ள 'விவசாயிகளின் கடன்கள்' என்ற அறிக்கையின்படி, நாட்டின் 8.94 கோடி விவசாயிகளில் 4.34 கோடி பேர் மட்டுமே வேளாண் கடன் பெறுபவர்களாக உள்ளனர்.*

*போதிய அளவில் வங்கி கிளைகள் இல்லாதது, வங்கிகளின் கடுமையான அணுகுமுறை, கடன்கள் வழங்குவதில் கால தாமதம், அடமானம் மற்றும் ஈட்டு தொடர்பான இடர்பாடுகள் போன்ற காரணங்களால், சுலபமாக கிடைக்கும் தனியார் கடன் வசதிகளையே பெரும்பாலான விவசாயிகள் நாடுவதாக தெரிகிறது.*

*வங்கிகள்*

*நாட்டில் வழங்கப்பட்டுள்ள மொத்த வேளாண் கடன்களில் அளவின் அடிப்படையில் வங்கிகள் 36 சதவீதம், தனியார் 26 சதவீதம் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் 20 சதவீதம் என்ற அளவில் பங்கினை கொண்டுள்ளதாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*ஆந்திரபிரதேசம் (82%), தமிழ்நாடு (74.5%), பஞ்சாப் (65.4%), கேரளா (64.4%), கர்நாடகா (61.6%) ஆகிய மாநிலங்களில் அதிக அளவிலும், மலை பிரதேசங்களை கொண்ட உத்ராஞ்சல் (7.2%), அருணாச்சலபிரதேசம் (5.2%) மற்றும் மேகாலயா (4.1%) போன்ற மாநிலங்களில் குறைந்த அளவிலும் விவசாயிகள் வேளாண் கடன் பெற்றுள்ளனர்.*

*தமிழ்நாடு*

*60.30 லட்சம் விவசாயிகளை கொண்ட ஆந்திரபிரதேசத்தில் 49.40 லட்சம் விவசாயிகளும், 38.80 லட்சம் விவசாயிகளை கொண்ட தமிழ்நாட்டில் 28.90 லட்சம் பேரும் வேளாண் கடன்கள் பெற்றுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.*

*மற்றொரு ஆய்வு அறிக்கையின்படி, 1970–71–ஆம் ஆண்டில் மொத்த வேளாண் உள்நாட்டு உற்பத்தியில் 2.56 சதவீதமாக இருந்த வங்கிகளின் வேளாண் கடன்கள், 1980–81–ல் 7.11 சதவீதமாகவும், 2000–01–ல் 11.47 சதவீதமாகவும், 2010–11–ல் 32.21 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.*

## குன்னூர் ஏல மையத்தில்

## 88 சதவீத தேயிலை தூள் விற்பனை

*குன்னூர், ஏப்.9–*

*குன்னூர் ஏல மையத்தில் 88 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. மேலும் ரூ.2 வரை தேயிலை தூளுக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டது.*

*ஏலம்*

*வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்கள் குன்னூரில் தேயிலை வர்த்தகர் அமைப்பினர் நடத்தும் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. விற்பனை எண் 14–க்கான ஏலம் கடந்த 5–ந் தேதி நடைபெற்றது. 6–ந் தேதி புனித வெள்ளி என்பதால் ஏலம் நடைபெறவில்லை. குறைந்த அளவு தேயிலை தூளே வந்ததால் ஒரே நாளில் ஏலம் நடத்தி முடிக்கப்பட் டது. ஏலத்திற்கு மொத்தம் 9 லட்சத்து 63 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 6 லட்சத்து 96 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும்,2 லட்சத்து 67 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும்*

*இருந்தது.*

*பாகிஸ்தான், ரஷ்யா*


*உள்நாட்டு வர்த்தகம் சுமாரான நிலையில் இருந்தது. வெளிநாட்டு வர்த்தகத்தை பொறுத்த வரை பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய இரு நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்தனர்.*

*ஏலத்தில் 88 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. ஏலத்திற்கு குறைந்த அளவு தேயிலை தூளே வந்த போதும் விலை உயர்வு ஏற்படவில்லை. மாறாக ஒரு கிலோ தேயிலை தூளுக்கு 2 ரூபாய் வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டது. சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 158 ரூபாய் என்று இருந்தது. 240 ரூபாய் என்பது ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூளின் உயர்ந்த விலையாக இருந்தது. சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 49 ரூபாயில் இருந்து 55 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 100 ரூபாயில் இருந்து 143 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 58 ரூபாயில் இருந்து 60 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 102 ரூபாயில் இருந்து 155 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*விற்பனை எண் 15–க்கான ஏலம் வருகிற 12, 13 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 9 லட்சத்து 87 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*

# கூடலூரில் களை கட்டும் பாகற்காய் விவசாயம்



கூடலூர் அள்ளூர்வயல் பகுதியில் கோடை கால பயிரான பாகற்காய் பயிரிடப்பட்டு இருக்கும் காட்சி.

கூடலூர்,ஏப்.9-

கூடலூர் பகுதியில் கோடை காலத்தில் பயிரிடக்கூடிய பாகற்காய் விவசாயம் தற்போது களை கட்டியுள்ளது.

### காலநிலைகளுக்கு ஏற்ப விவசாயம்

நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் இரு விதமான கால நிலைகள் நிலவும் பகுதியாகும். மலையும், சமவெளி பிரதேசமும் கொண்ட பகுதி என்பதால் மலை காய்கறிகளும், சமவெளி பிரதேசத்தில் விளையும் பயிர்களும் இந்த பகுதியில் விளைகின்றன. குறிப்பாக மழை காலங்களில் பீன்ஸ், இஞ்சி, குறுமிளகு, ஏலக்காய், கிராம்பு போன்ற பயிர்கள் விளைகின்றன.

மழை காலம் முடிந்து பனிக்காலத்திலும் மலை பிரதேச காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. கோடை காலம் தொடங்கி விட்டால் வறட்சியான காலநிலை காணப்படும். இந்த கால கட்டங்களில் கோடை கால பயிரான பாகற்காய், புடலங்காய், பஜ்ஜி மிளகாய், கத்தரிக்காய் உள்ளிட்ட பயிர்கள் ஏக்கர் கணக்கில் விளைவிக்கப்படுகின்றன.

### தொரப்பள்ளி

இதில் பாகற்காய் விவசாயம் முக்கிய இடத்தை வகிக்கிறது. மண்வயல், தொரப்பள்ளி, அள்ளூர்வயல், ஏழுமரம், கூடலூர், கோத்தர் வயல், கம்மாத்தி உள்ளிட்ட பகுதியில் பாகற்காய் விவசாயம் களை கட்டியுள்ளன. இங்கு விளையும் பாகற்காய்கள் அதிகளவு சரக்கு லாரிகளில் மூடை கணக்கில் கேரளாவுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்கப்படுகிறது.

இதன் மூலம் கணிசமான லாபத்தை விவசாயிகள் பெறுகின்றனர். இதனால் ஆண்டுதோறும் கோடை காலத்தில் பாகற்காய் விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து விவசாயி ஆனந்த் என்பவர் கூறியதாவது:- கோடை காலத்தில் விவசாயிகளுக்கு பாகற்காய் பயிர் கை கொடுக்கிறது. நீர் நிலைகளில் தண்ணீர் குறைந்து உள்ள இந்த காலகட்டத்தில் நிலத்தில் அடிப்பாகத்தில் உள்ள ஈரம் பாகற்காய் கொடிகள் படர்வதற்கு போதுமானது.

இதனால் கோடை காலங்களில் பாகற்காய் பயிர் பயிரிடுவதில் எந்த சிரமமும் ஏற்படவில்லை. இருப்பினும் அவ்வப்போது பூச்சிகள் தாக்குதலுக்கு ஆளாகாமல் இருக்க கூடுதல் கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டிய நிலை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.